**தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 19 பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அலுவலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 134.12 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 57.91 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 76.21 மில்லியன் அதாவது 56.82 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 84.79 | 53.30 | 31.49 | 37.14 |
| மூலதனம் | 49.33 | 4.61 | 44.72 | 90.65 |
| **மொத்தம்** | **134.12** | **57.91** | **76.21** | **56.82** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அலுவலகத்திற்குரிய 01901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.50 | 2.48 | 1.20 | 2.21 | 7.50 | 5.53 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

அலுவலகத்தின் கீழுள்ள 6000/0000/00/0013/0146/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 25,381 ஆகும்.

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அலுவலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் போன்றவைகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 |
| (இ) | அடியிதழ்சேர் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |

## 3.2 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம், பெறப்பட்ட செயல்நிமித்தக் கட்டுநிதி செயற்பாடு பூர்த்தியடைந்து 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 07 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 132,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்தக் கட்டுநிதிகள் செயற்பாடு பூர்த்தியடைந்து 16 நாட்கள் முதல் 02 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

அலுவலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டிற்குரிய கணக்கெடுப்புச் சபை அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த 24 பொருள் உருப்படிகளின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 757 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் பொருட்பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தன.

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்காக நியமிக்கப்பட்டிருந்த பொருள் கணக்கெடுப்புச் சபையினால் பயன்படுத்துவதற்கு முடியாத பொருட்களாக இனங்காணப்பட்ட 57 வகையான பொருட்களிற்குரிய 109 உருப்படிகள் நிதிப்பிரமாணம் 770 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க அரசாங்க நிதிப்பிரமாண ஆலோசனைகளின் பிரகாரம் முறையாக கைவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| நிதிப்பிரமாணம் 237(இ) மற்றும் நிதிப்பிரமாணம் 138(4) | சிறுசெலவுக் கட்டுநிதி மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 117,827 கூட்டுமொத்த தொகையை மீள்நிரப்புவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 21 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 9/2009 மற்றும் 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | மீளாய்வாண்டில் ரூபா 1,648,875 போக்குவரத்துப் படிகளும் ரூபா 475,382 மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின வேதனங்களும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் சேவை நிலையத்திற்கு உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்வதற்காக கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருக்கவில்லை. |

**(இ) ஏனையவை**

| | |
|---|---|
| 2010 நவம்பர் 21 ஆம் திகதிய பாராளுமன்ற பதவியணி ஆலோசனைக் குழுத் தீர்மானமத்தின் 05 ஆம் பந்தி | பிற்பகல் 6.30 இற்கு பின்னர் பாராளுமன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்ற திகதிகளில் மாத்திரம் பாராளுமன்ற பதவியணியினர் உள்ளடங்கலாக பாராளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள 03 அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களிற்காக கூட்டப் படிகள் வழங்கக்கூடியதாக இருந்த போதிலும் பிற்பகல் 6.30 இற்கு முன்னர் வெளிச்சென்ற மற்றும் கூட்டங்கள் நடைபெற்ற திகதிகளில் பாராளுமன்ற வளாகத்தில் கடமையிலிருக்காத 08 உத்தியோகத்தர்களிற்கு கூட்டப் படிகளாக ரூபா 122,625 செலுத்தப்பட்டிருந்தன. |

## 3.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

**அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைப் பின்பற்றாமை**

மீளாய்வாண்டில் ஒவ்வொன்றும் ரூபா 119,500 படி ரூபா 956,000 மொத்தக் கிரயத்தில் 08 மடிக்கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு சந்தையில் நிலவுகின்ற விலை முறை பிரயோகிக்கப்பட்டிருந்த போதிலும் கூறுவிலை கோருதல், கையளித்தல், திறத்தல், மதிப்பீடு செய்தல், தெரிவு செய்தல் போன்ற பெறுகை நடவடிக்கைகள் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பெறப்பட்டிருந்த கூறுவிலைகளிலிருந்து கூடிய விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 3.6 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அலுவலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் அலுவலகத்தால் சீராக்கம் செய்யப்பட்டிருக்காத பந்திகளிற்கான தொடர்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2013 | 1.6(ஈ)(ii) | உள்வருதல் வெளிச்செல்லலை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாளப் பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | 1.6(எ) | கொள்வனவுகள் தொடர்பில் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 1.1 | சுற்றறிக்கை அறிவித்தல்களின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 1.8 | கொள்வனவுகள் தொடர்பில் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 12 | 10 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 13 | 05 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 41 | 14 | 27 |
| | **மொத்தம்** | **78** | **44** | **34** |